பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 02 வியாழக்கிழமை 16.06.2022 கதிர் 114

## தீ விபத்தில் கடை நாசம்!



தலவாக்கலை நகரில் பழங்கள் மற்றும் மரக்கறி விற்பனை செய்து வந்த கடை ஒன்றில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் கடை முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளது எனத் தலவாக்கலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

☞2



## ஏறாவூர் வாவியில் மீனவரின் சடலம்!

மட்டக்களப்பு, ஏறாவூர் - ஆறுமுகத்தான்குடியிருப்பு வாவியிலிருந்து மீனவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இன்று காலை மீட்கப்பட்ட இந்தச் சடலம் ஆறுமுகத்தான் குடியிருப்பு துரைச்சாமி வீதியை அண்டி

☞2

## தேவாலயத்துக்கு அருகில் இருந்து கைக்குண்டு மீட்பு



நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டிய தேவாலயத்துக்கு அருகாமையில் உள்ள பாதையொன்றுக்கு அருகில் இருந்து கைக்குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சந்தேகத்துக்கிடமான பொதியொன்று காணப்பட்டதைத் தொடர்ந்து, குறித்த பொதியில் கைக்குண்டு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது

☞2

## பாடசாலைகளுக்கு நாளை விடுமுறை

### கல்வி அமைச்சு அறிவிப்பு

நாடு முழுவதும் உள்ள அனைத்து அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு நாளை வெள்ளிக்கிழமை விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

☞2

## யாழ். - கொழும்பு விசேட ரயில் சேவை

### நாளை முதல் ஆரம்பம்

(இ.கலையமுதன்)



தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியைக் கருத்தில்கொண்டு யாழ்ப்பாணம் - கொழும்பு விசேட ரயில் சேவை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது என யாழ். ரயில் நிலையப் பிரதம அதிபர் தி.பிரதீபன்

☞2

# ஆட்சி மாற்றத்துக்கு தேர்தல் வேண்டும்!

### சம்பந்தனின் கூற்றை வரவேற்று சஜித் கருத்து



**நாட்டில் ஆட்சி மாற்றத்தைக் கோரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் கருத்தை வரவேற்கின்றோம். இந்த ஆட்சி மாற்றம் மக்கள் ஆணையுடன் ஜனநாயக வழியில் இடம்பெற வேண்டும். அதற்காக ஜனாதிபதித் தேர்தலும், நாடாளுமன்றத் தேர்தலும் விரைந்து நடத்தப்பட வேண்டும்.**

**- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

☞2

## எரிபொருளுக்காக வரிசையில் காத்திருந்த ஓட்டோ சாரதி சாவு

எரிபொருளுக்காக வரிசையில் காத்திருந்த மற்றுமொருவர் உயிரிழந்துள்ளார்.

பாணந்துறை - வேகடப் பகுதியில் உள்ள எரிபொருள் நிலையத்துக்கு முன்பாக ஓட்டோ சாரதி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர், எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காக நீண்ட நேரம் வரிசையில் காத்திருந்த நிலையில் மயங்கி கீழே விழுந்து உயிரிழந்துள்ளார் .

இவ்வாறு உயிரிழந்தவர் 55 வயதானவர் எனத் தெரியவந்துள்ளது. சாரதியின் சடலம், பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## ஐந்து வயது மகனை ஆற்றில் தள்ளிவிட்டு தன்னுயிரை மாய்க்க முயன்ற தாய் கைது!

### மகனைத் தேடுகின்றனர் கடற்படையினர்



வத்தளை, ஹெந்தலை - கதிரான பாலத்துக்கு அருகில் களனி ஆற்றில் தனது ஐந்து வயது மகனைத் தள்ளிவிட்டு, ஆற்றில் குதித்து உயிரைத் துறக்க முயன்ற பெண்ணை வத்தளைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இப் பெண் நேற்றிரவு 7.30 அளவில் தனது மகனை ஆற்றில் தள்ளிவிட்டு, ஆற்றில் தானும் குதிக்க முற்பட்டபோது, வீதியால் பயணித்த நபர் ஒருவர் அவரைத் தடுத்து நிறுத்தியுள்ளார்.

இதையடுத்து, அவர் ஹெந்தலை காவலரணில் தடுத்துவைக்கப்பட்டு பின்னர் வத்தளைப் பொலிஸாரால் கைதுசெய்து அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

☞2

## வலி. கிழக்கு தவிசாளருக்கு எதிரான வழக்கு நவம்பர் 16 க்கு ஒத்திவைப்பு



நிலாவரையில் தொல்லியல் திணைக்களம் மேற்கொண்ட முயற்சிகளுக்குத் தடையாக அமைந்ததன் வாயிலாக தொல்லியல் திணைக்களத்தின் அரச கருமங்களுக்குத் தடை ஏற்படுத்தினார் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷுக்கு எதிராகத் தொடாரப்பட்ட வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 16ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

☞2

## கொழும்பில் முஸ்லிம் இளைஞர் மாயம்

### கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு



குருநாகல் மாவட்டம், மாவத்தகம பிரதேச செயலகத்துக்குட்பட்ட மெல்வத்த வேஉடப் பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய முஹமட் நஸ்லான் என்றபெயருடைய இளைஞர் ஒருவர் கடந்த 8ஆம் திகதி கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் வைத்து காணாமல்போயுள்ளார்.

கொழும்பில் பிட்டிங் தொழில் புரிவதற்காக வந்திருந்த குறித்த இளைஞர் தம் நண்பர் சகிதம் ஊருக்குச் செல்வதற்காகக் கொழும்பு கோட்டை ரயில் நிலையம் வரை வந்தார் எனவும், இவருடைய நண்பர் இருவருக்குமான ரயில்

☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## யாழ். - கொழும்பு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்

யாழ். ரயில் நிலையத்தில் இன்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாளை 17ஆம் திகதி வெள்ளிக்கிழமையிலிருந்து கல்கிஸையில் இருந்து காங்கேசன்துறைக்கு இரவு நகர்சேர் கடுகதி ரயில் ஒன்று சேவையில் ஈடுபடவுள்ளது.

இது ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் கல்கிஸையில் இருந்து இரவு 10 மணிக்குப் புறப்பட்டு அங்கிருந்து வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி ஆகிய ரயில் நிலையங்களில் நிறுத் தப்பட்டு அம்பலங்கோட பொல்காவலை குருநாகல் அநுராதபுரம், வவுனியா, கிளிநொச்சி ஊடாக யாழ்ப்பாணத்தை அதிகாலை 5.25 மணிக்கு வந்தடைந்து அங்கிருந்து அதிகாலை 5.30 மணிக்குப் புறப்பட்டு காங்கேசன்துறையைச் சென்றடையும்.

ஞாயிற்றுக்கிழமைகளில் மாத்திரம் காங்கேசன்துறையில் இருந்து இரவு 10 மணிக்குப் புறப்பட்டு சுன்னாகம் கோண்டாவில் ஊடாக 10.25 மணிக்கு யாழ்ப்பாணத்தை வந்தடைந்து 10.30 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு கிளிநொச்சி, வவுனியா, அநுராதபுரம், குருநாகல், கம்பஹா, மருதானை, கொழும்பைச் சென்றடைந்து அங்கிருந்து பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை ஊடாக தெஹிவளையைச் சென்றடையவுள்ளது.

நகர்சேர் கடுகதிக்குரிய ஒரு வழிக் கட்டணமாக 2 ஆயிரத்து 800 ரூபா அறவிடப்படவுள்ளது. இதற்கான முன்பதிவுகள் யாழ்ப்பாண ரயில் நிலையத்திலும் ஏனைய முன்பதிவுகளை மேற்கொள்ளக் கூடிய ரயில் நிலையங்களிலும் மேற்கொள்ளலாம். இன்றைய காலகட்டத்தில் யாழ்ப்பாணம் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக இது அமையும் என எதிர்பார்க்கின்றோம். - என்றார்.

## தேவாலயத்துக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனத் தெரிவிக்கப்படுகின்றது

இந்நிலையில், தற்போது குண்டு செயலிழக்கும் பிரிவினரை வரவழைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

## ஏறாவூர் வாவியில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வசிக்கும் நான்கு பிள்ளைகளின் தந்தையான சின்னத்துரை ஸ்ரீதரன் (வயது - 51) என்பவருடையது என உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளனர்.

வழமை போன்று தனியாகவே வாவியில் இரவு நேர மீன்பிடிக்குச் செல்லும் இவர் இரவுச் சாப்பாட்டையும் எடுத்துக் கொண்டு நேற்று மாலை தோணியில் வாவிக்கு மீன்பிடிக்கச் சென்றுள்ளார்.

எனினும், இன்று காலை அவரது சடலம் வாவியில் மிதப்பதைக் கண்டு சக மீனவர்கள் மீட்டு கரைக்குக் கொண்டு வந்து சேர்ப்பித்துள்ளனர்.

நேற்று மாலை வாவியில் பலத்த காற்று வீசியது எனத் தெரிவிக்கும் மீனவர்கள் அதன் காரணமாக தோணி கவிழ்ந்து மீனவர் வாவியில் வீழ்ந்து மூழ்கியிருக்கக் கூடும் எனவும் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

## தீ விபத்தில் கடை .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தீ விபத்து நேற்றிரவு 10 மணியளவில் ஏற்பட்டுள்ளது எனப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

தலவாக்கலைப் பொலிஸார் மற்றும் பொதுமக்கள் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்தமையுடன், சுமார் ஒரு மணித்தியாலயங்களுக்குப் பிறகு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

குறித்த கடையின் உரிமையாளர் மற்றும் அவரின் உதவியாளர் கடையில் இல்லாதபோதே இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தீயால் மரக்கறி மற்றும் பழங்கள் முற்றாகத் தீக்கிரையாகியுள்ளன.

எனினும், தீ விபத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் இதுவரை கணிக்கப்படவில்லை.

தீ ஏற்பட்டமைக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் தலவாக்கலைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஐந்து வயது .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில், ஆற்றில் தள்ளிவிடப்பட்ட சிறுவனைக் கண்டுபிடிக்க படகுகள் மூலம் கடற்படையினர் மற்றும் பொலிஸார் தேடுதல் பணிகளை முன்னெடுத்துள்ளனர்.

## வலி. கிழக்கு ........

கடந்த வருடம் தொடரப்பட்ட இந்த வழக்கில் வழக்கை முன்கொண்டு செல்வதாயின் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறுமாறு தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று மல்லாகம் நீதிவான் திருமதி காயத்திரி சைலவன் முன்னிலையில் வழக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, அச்சுவேலி பொலிஸார் மேலதிக அறிக்கையைச் சமர்ப்பித்தமையுடன் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் மன்றில் தெரியப்படுத்தினர். இதனைத் தொடர்ந்து எதிர்வரும் நவம்பர்மாதம் 16ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## கொழும்பில் முஸ்லிம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணச் சீட்டைப் பெற்றுக்கொண்டு வந்து பார்த்த தருணத்தில் ஆள் காணாமல்போயுள்ளார் எனவும் கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் பற்றிய தகவல்கள் கிடைக்குமாயின் அவருடைய தந்தை எம். டி. சாலிஹீன் 0758005637 அல்லது அவருடைய உறவினர் ஏ.எம். முஜாஹிரின் 0772820820 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அறியத் தருமாறு குடும்பத்தினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## ஆட்சி மாற்றத்துக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கையின் தற்போதைய அரசியல், பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காண வேண்டுமெனில் ஆட்சி மாற்றம் கட்டாயம் வேண்டும் என்று வலியுறுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் கருத்தை நாம் வரவேற்கின்றோம். எமது கட்சியினதும் நிலைப்பாடும் இதுவாகவே உள்ளது.

தற்போதைய ஆட்சியில் சூதாட்ட அரசியல் சூடுபிடித்துள்ளது. இது நாட்டுக்குக் கேவலமானது. அதேவேளை, இந்த ஆட்சியால் நாள்தோறும் வீதிகளில் வரிசைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. அனைத்துப் பொருள்களுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பொருள்களின் விலையும் நாள்தோறும் சடுதியாக உயர்வடைந்து வருகின்றது. மக்கள் பட்டினிச்சாவை எதிர்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆட்சி மாற்றம் நிகழ்ந்தால்தான் எமது நாடு மீண்டெழ சர்வதேசம் கை கொடுக்கும். இந்த அராஜக ஆட்சி தொடர்ந்தால் அதாள பாதாளத்தில் விழுந்து கிடக்கும் நாட்டின் பொருளாதாரத்தைத் தூக்கி நிமிர்த்த முடியாது. எனவே, ஆட்சி மாற்றம் உடன் அவசியம்.

ஆட்சி மாற்றம் மக்கள் ஆணையுடன் ஜனநாயக வழியில் இடம்பெற வேண்டும். அதற்காக ஜனாதிபதித் தேர்தலும், நாடாளுமன்றத் தேர்தலும் விரைந்து நடத்தப்பட வேண்டும். - என்றார்.

## பாடசாலைகளுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கை ஒன்றை வெளியிட்டு கல்வி அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது எனக் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.










# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தணியாத அதிகார வெறி

வெறுமனே வாய் வாக்குறுதிகளை அள்ளி வீசி மக்களையும் சர்வதேச சமூகத்தையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஏமாற்றுகின்றமையை விடுத்து, அவற்றைச் செயற்படுத்த வேண்டும் என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும், முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய தெரிவித்திருக்கிறார்.

19ஆவது அரசமைப்புத் திருத்தத்தை மீள நடைமுறைக்குக் கொண்டு வருவேன், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிக்கின்றமையை எதிர்க்க மாட்டேன் என்றெல்லாம் கூறிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அவற்றைச் செயற்படுத்த விடாமல் முட்டுக்கட்டை போட்டு நிற்கின்றார் என்று ஜயசூரிய விசனம் தெரிவித்திருக்கிறார்.

19ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் முன்னேற்றகரமான விடயங்களை நீக்கி, தன்னுடைய நிறைவேற்று அதிகாரங்களை மேலும் வலிமைப்படுத்தும் நடவடிக்கையைத் தாம் அதிகாரத்துக்கு வந்து, புதிய நாடாளுமன்றத்தை அமைத்த கையோடே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னெடுத்தபோதே அது அழிவுப் பாதைக்கான ஆரம்பம் எனச் சுட்டிக்காட்டப்பட்டது. அந்த முயற்சி எதேச்சதிகாரத்துக்கு வழிவகுக்கும், ஜனநாயகத்தின் உயரிய மாண்புகளை எல்லாம் சீரழிக்கும் என அப்போதே சுட்டிக்காட்டப்பட்டது.

ஆனால் அந்த எச்சரிக்கையை எல்லாம் மீறி 19ஐ இல்லாமல் ஆக்கிய கோட்டாபய, அதன் தொடர் விளைவாக நாடு பெரும் களேபரத்தில் ஆழ்ந்த போது, அதற்கு முகம் கொடுக்க முடியாத நிலையில் 19ஐ மீள நடைமுறைக்குக் கொண்டு வரும் விதத்தில் 21,ஆவது திருத்தம் ஏற்படுத்தப்படும் என நாட்டு மக்களுக்குத் தாமாகவே பகிரங்கமாக உறுதியளித்தார்.

இப்போது களேபர நிலைமை சற்று சீரடைந்ததும், தமது கட்டு மட்டில்லா அதிகாரங்களை விட்டுக்கொடுக்கும் நீதி, நியாயமான ஏற்பாட்டுக்கு இணங்காமல், அதனை இழுத்தடிக்கிறார் அவர்.

அவரின் சகோதரரான மஹிந்த ராஜபக்ஷவும் கூட இந்தப் போக்குக்கு விதிவிலக்கல்லர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கீழ் தாம் பிரதமராக இருந்தபோதுதான். பிரதமரினதும், நாடாளுமன்றத்தினதும் அதிகாரங்களை ஜனாதிபதி பிடுங்கி எடுக்கும் 20ஆவது திருத்தத்துக்கு தாமே துணை போனார் மஹிந்த ராஜபக்ஷ. அதன் மூலம் இலங்கையில் ஜனநாயகக் கட்டமைப்புக்களை சீரழிப்பதற்கு அவரும் சேர்ந்து வழி ஏற்படுத்தினார்.

அதன் விளைவுகள் மோசமான போது –

மக்களின் பிரதிபலிப்பு கோபாவேசமாக வெளிப்பட்ட வேளையில் –

அவற்றைச் சமாளித்துத் தாம் அப்போது வைத்திருக்கும் பிரதமர் பதவியையும் தக்க வைப்பதற்காக 19 ஆவது திருத்தத்தை அப்படியே மீளக் கொண்டு வருவதற்கு வழி செய்யும் 21 ஆவது திருத்தம் உடன் அவசியம் என்று பகிரங்கமாக அறிவித்தார். அதற்கான யோசனைத் திட்டத்தை பிரதமர் என்ற முறையில் அமைச்சரவைக்கும் தாமே கொண்டு வந்தார்.

ஆனால் இப்போது பிரதமர் பதவியை இழந்து, சாதாரண எம்.பியாக இருந்து கொண்டு, தமது சகோதரரான ஜனாதிபதியின் அதீத அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதற்காக ‘21ஆவது திருத்தம் அல்ல; மக்களின் உடனடிப் பிரச்சினைக்கு முகம் கொடுப்பதே இப்போது முக்கியமானது’ என்று புதிய கதை விடுகின்றார் அவர்.

அதிகார வெறி தணியாது. அது திருந்தவும் விடாது.

# இலங்கைக்கு உதவ பல நாடுகள் முன்வந்துள்ளன என்கின்றார் நஷீட்

## மகிழ்ச்சியளிக்கிறது என்றார் ஹர்ஷ



இலங்கைக்கு உதவுவதற்குப் பல நாடுகள் முன்வந்துள்ளன என மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய சபாநாயகருமான மொஹம்மட் நஷீட் தெரிவித்துள்ளமை மகிழ்ச்சியளிப்பதாக தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா, அவருடன் உரையாடிய கருத்துக்கள் தொடர்பில் தான் தெரிவித்த விடயங்கள் உறுதியாகவுள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சவுதி மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் இலங்கைக்கு உதவ மறுத்து விட்டதாக மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மொஹம்மட் நஷீட் தன்னிடம் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் தெரிவித்தார் எனக் ஹர்ஷ சில்வா தெரிவித்திருந்தார். எனினும் மொஹம்மட் நஷீட், ஹர்வின் கருத்திற்கு மறுப்பு தெரிவித்திருத்து டுவிட்டர் பதிவொன்றையும் பதிவு செய்திருந்தார். இவர்கள் இருவரும் தெரிவித்த கருத்துக்கள் அரசியல் வட்டாரத்தில் பேசுபொருளாகியுள்ள நிலையில், மொஹம்மட் நஷீட்டின் கருத்திற்கு ஹர்ஷ டி சில்வா மீண்டும் பதிலளித்துள்ளார். இது தொடர்பில் டுவிட்டர் பதிவொன்றை இட்டுள்ள அவர், ‘என் நண்பர் மொஹம்மட் நஷீட்டுடன் சில வாரங்களுக்கு முன்பு பேசிய விடயங்கள் தொடர்பில் தெரிவித்த கருத்துக்களில் உறுதியாக இருக்கிறேன்.

எவ்வாறாயினும், பல நாடுகள் இலங்கைக்கு உதவ ஆர்வமாக உள்ளன என்பதை இப்போது அவர் நம்புவதைக் குறிப்பிடுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்’ என்று தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்துக்கு புதிய தலைவர்

*அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்துக்கு புதிய தலைவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அதன்படி, புதிய தலைவராக விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் தர்ஷன சிறிசேன நியமிக்கப்பட்டுள்ளார்.*

*அண்மையில் நடைபெற்ற 95 ஆவது பொதுச் சபையில் அவருக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டது.*

*அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் கலாநிதி அனுருத்த பதெனிய 11 வருடங்கள் அந்தப் பதவியை வகித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.*

# கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கும் கப்பலுக்கு நாளொன்றுக்கு 18,000 டொலர்

40 ஆயிரம் மெற்றிக் தொன் உராய்வு எண்ணெய்யை ஏற்றிக் கொண்டு கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த கப்பல் புதன்கிழமையுடன் 50 நாள்களாகத் தரித்து நிற்கிறது.

மேற்படி எரிபொருள் தாங்கி கப்பல் கடந்த ஏப்ரல் 26ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்திருந்த போதிலும், டொலர் பற்றாக்குறை காரணமாக துறைமுகத்திலிருந்து கப்பலை விடுவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், அந்தக் கப்பலை நங்கூரமிடுவதற்கு தாமதக் கட்டணமாக நாளொன்றுக்கு 18 ஆயிரம் டொலர்களை செலுத்த வேண்டியுள்ளதாகவும், எரிபொருள் தாங்கி விடுவிக்கப்பட்டிருந்தால், நாட்டிலுள்ள 6 மின் உற்பத்தி நிலையங்களுக்குத் தேவையான எரிபொருளை வழங்க முடியும் எனவும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

எனினும், அந்த முடிவை எடுக்கத் தவறியதால், போக்குவரத்துக்காக ஒதுக்கப்பட்ட 1,500 மெற்றிக் தொன் டீசலை யுகதனவி மின் உற்பத்தி நிலையத்துக்கு விடுவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

இதன் காரணமாக தற்போது நாட்டில் டீசலை பெற்றுக்கொள்வதற்காக வாகன சாரதிகள் இரவு பகலாக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் காத்திருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பிள்ளைகளைப் பாதுகாக்க விழிப்பூட்டல் செயலமர்வுகள்



(நூருல் ஹுதா உமர்)

பண்டாரகம பிரதேசத்தில் அட்டுலுகம பகுதியைச் சேர்ந்த 09 வயது சிறுமி பாத்திமா ஆயிஷா படுகொலையைத் தொடர்ந்து பிள்ளைகளைப் பாதுகாப்போம் என்கிற விழிப்பூட்டல் வேலைத்திட்டம் சமூக சேவைக்கான நட்புறவு ஒன்றியத்தால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் பிள்ளைகளுக்கு விழிப்பூட்டல் செயலமர்வுகளை ஒன்றியம் மேற்கொள்ள தொடங்கி உள்ளது. கல்முனையில் தரம் 07, 08 மாணவர்களுக்கு ஒன்றியத்தால் நடத்தப்பட்ட சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான சிறப்பு விழிப்பூட்டல் கருத்தரங்கு வரவேற்பைப் பெற்று உள்ளது.

இதில் ஒன்றியத்தின் தலைவர் ஏ. றோஸான் முஹம்மத் வளவாளராக கலந்து கொண்டு பேசியபோது ‘தற்போது நாடு பூராவும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் கூடுதலாக இடம்பெற்று வருகின்றன. படுகொலைகள் கூட இடம்பெற்று உள்ளன. தற்கொலைகளும் நடக்கின்றன. சிறுவர் சமுதாயம் பாதுகாக்கப்பட வேண்டும். அதே போல சிறுவர்கள் மிகுந்த சுய விழிப்புடன் செயற்பட வேண்டும்.’ – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு

வியாழக்கிழமை 16.06.2022

# உக்ரைனின் புனரமைப்பு பணிக்காக நிதி திரட்டும் நடனக் கலைஞர்கள்



உக்ரைனைச் சேர்ந்த பாலே நடன குழு ஒன்று பிரிட்டனில் நிகழ்ச்சியை நடத்தி உக்ரைன் புனரமைப்புக்காக நிதி திரட்டி வருகிறது. உக்ரைனைச் சேர்ந்த கீவ் சிட்டி பாலே கம்பனி என்ற குழு உலகம் முழுவதும் நடன நிகழ்ச்சிகளை நடத்தும் பயணத்தில் ஈடுபட்டு இருந்தது. உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதல் தொடங்கிய போது, நாடு திரும்ப முடியாமல் அவர்கள் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் சிக்கிக் கொண்டனர். 100 நாள்களையும் கடந்து போர் நீடித்து வரும் நிலையில், தங்கள் நாட்டில் ஏற்பட்டுள்ள சேதங்களை புனரமைப்பதற்கு நிதி திரட்டுவதற்காக அவர்கள் பல்வேறு நாடுகளில் பாலே நடன நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர்.

தற்போது பிரிட்டன் வந்துள்ள உக்ரைன் நடனக் குழு, யார்க் நகரத்தில் உள்ள ராயல் கலையரங்கில் நடன நிகழ்ச்சியை அரங்கேற்றினர். உக்ரைனில் இயல்பு வாழ்க்கை துயரம் நிறைந்ததாக மாறி உள்ள போதும் உக்ரைன் உயிர்ப்புடன் உள்ளதை நடனம் மூலம் உலகிற்கு தெரிவிக்க விரும்புகிறோம் என அந்நாட்டின் கலைஞர்கள் கூறுகின்றனர். உக்ரைன் கலைஞர்களின் பாலே நடன நிகழ்ச்சிக்கு பிரிட்டன் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்து வருகிறது.

# கொரோனாவால் 63 லட்சம் பேர் சாவு

## உலக அளவில்



உலகம் முழுவதும் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 63.36 லட்சத்தை தாண்டியது. பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 6,327,918 பேர் கொரோனா வைரஸால் உயிரிழந்தனர். உலகம் முழுவதும் கொரோனாவால் 542, 343,503பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில்517,384,128 பேர் குணமடைந்துள்ளனர். மேலும் 36,284 பேர் கவலைக்கிடமான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.



# பிரான்ஸில் நவீன தொழில்நுட்ப கண்காட்சி பார்வையாளர்களை கவரும் பறக்கும் டாக்ஸி

பிரான்ஸ்தலைநகர்பாரிஸில்தொடங்கியுள்ள நவீன தொழில்நுட்ப கண்காட்சியில் ஜேர்மனியின் டிரோன் டாக்ஸி ஒன்று ஏராளமானோரின் கவனத்தை கவர்ந்துள்ளது. ஜேர்மனியை சேர்ந்த ஸ்டார்ட் அப் நிறுவனமான வெலோகாப்டர் இந்த டிரோன் டாக்ஸியை வடிவமைத்துள்ளது. 5 ஆண்டுகளுக்கு முன்னரே இந்த பறக்கும் டாக்ஸி வடிவமைக்கப்பட்ட போதும் தற்போது தான் அதன் கட்டமைப்பு முழுமை பெற்றுள்ளதாக வெலோகாப்டர் நிறுவனம் தெரிவித்திருக்கிறது. அரங்கிற்கு வரும் அனைத்து தொழில்நுட்ப நிபுணர்களும் டிரோன் டாக்ஸியில் ஏறி சோத னையிட்டு வருகின்றனர்.

தற்போது டிரோன் டாக்ஸி பறக்க தயாராக உள்ள நிலையில், இதற்கான உரிமங்களை பெற பல்வேறு நாடுகள் முயற்சி செய்து வருகின்றன என வெலோகாப்டர் நிறுவனம் தெரிவித்திருக்கிறது. இதனால் விரைவில் புழக்கத்திற்கு கொண்டு வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. பாரிஸ் கண்காட்சியில் பறக்கும் டாக்ஸி தவிர பல்வேறு நவீன தொழில்நுட்ப கருவிகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.



# முஷாரப்பை பாகிஸ்தானுக்கு அழைத்து வர ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெறுகின்றன

## குடும்பத்தினருடனும் ராணுவம் ஆலோசனை


டுபாயில் கவலைக்கிடமான நிலையில் உள்ள பர்வேஸ் முஷாரப்பை, ஏர் அம்புலன்ஸ் மூலம் அழைத்து வர பாகிஸ்தான் ராணுவம் ஏற்பாடுகளை செய்து வருகிறது. கடந்த 1999ம் ஆண்டு முதல் 2008ம் ஆண்டு வரை பாகிஸ்தானை ஆட்சி செய்த சர்வாதிகாரியான அதிபர் பர்வேஸ் முஷாரப் (78), தேசத் துரோக வழக்கில் குற்றச்சாட்டுக்கு ஆளானார். அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் அவரது மரண தண்டனைநிறுத்திவைக்கப்பட்டது. தொடர்ந்து உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையில் இருந்த முஷாரப், ஐக்கிய அரபு எமிரேட்ஸின் நகரான டுபாயில் உள்ள மருத்துவமனையில் 2016 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்டிருந்தார்.

பல ஆண்டுகளாக சிகிச்சை பெற்றுவந்த அவருக்கு, நாளுக்கு நாள் அடுத்தடுத்த உடல் உறுப்புகள் பலவீனம் அடைந்து வந்தன. குணமடைந்து விடுவார் என்று எதிர்பார்த்த நிலையில், அதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. குறிப்பாக கடந்த மூன்று வாரங்களாக அவரது நிலைமை மிகவும் மோசமாகி உள்ளது. 'அமிலாய்டோசிஸ்' என்ற நோய் அவரை பாதித்திருப்பதால், அவரை மீட்பது கடினமாக இருப்பதாக மருத்துவமனை நிர்வாகமும் தெரிவித்துவிட்டது.

இந்நிலையில் உயிருக்கு ஆபத்தானநிலையில்முஷாரப்பை டுபாய் மருத்துவமனையில் இருந்து பாகிஸ்தான் அழைத்து வர பாகிஸ்தான் ராணுவம் முன் வந்துள்ளது. இதுதொடர்பாக பாகிஸ்தான் ஊடகங்களில் வெளியான செய்தியில், 'ஆபத்தான நிலையில் இருக்கும் முஷாரப்பை பாகிஸ்தானுக்கு அழைத்து வருவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. இதுதொடர்பாக முஷாரப்பின் குடும்பத்தினரிடம் ராணுவம் பேசியுள்ளது. ஏர் அம்புலன்ஸ் மூலம் அவரை அழைத்துவர ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈரானில் அடுத்தடுத்து 7 முறை நிலஅதிர்வு

ஈரானின் தெற்கு கீஷ் தீவில் நேற்று அடுத்தடுத்து 7 முறை நிலஅதிர்வு ஏற்பட்டதால் பொதுமக்கள் அச்சத்தில் உறைந்தனர். ஹார்மோஸ் ஜலசந்திக்கு அருகில் உள்ள தீவில் 6 ரிக்டர் என்ற அளவில் 4 அதிர்வுகளும், 5.3 ரிக்டர் புள்ளியில் ஒரு அதிர்வும் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஆனால் சேத விவரங்கள் உயிரிழப்புக்கள் குறித்த எந்த தகவலும் தெரிவிக்கப்படவில்லை. டுபாய் மற்றும் அபுதாபியில் உள்ள பொதுமக்களும் நிலஅதிர்வை உணர்ந்தனர் என ஐக்கிய அரபு எமிரேட்ஸின் தேசிய புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கத்தாரிலும் நிலஅதிர்வு ஏற்பட்டுள்ளது. இது ரிக்டர் அளவுகோளில் 5.3 புள்ளிகளாக பதிவானதாக கட்டார் நிலநடுக்க தகவல் மையம் கூறியுள்ளது.



# மாணவர்களுக்கு தனியான சைக்கிள் பாதை தயாராகின்றது மட்டக்களப்பு மாநகர சபை




சிறுவர் சிநேக மாநகர கட்டமைப்பின் கீழ், பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பான பயணத்தை உறுதிப்படுத்தும் வகையில் சைக்கிள் பாதைக்கான ஒதுக்கீட்டு ஒழுங்குகளை மேற்கொள்வது தொடர்பிலான கலந்துரையாடலானது நேற்று மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன் தலைமையில் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

சிறுவர்களின்பாதுகாப்பு, அவர்களின் சுதந்திரமான வாழ்வியல் முறைகள் என்பவற்றினைக் கருத்தில் கொண்டு மட்டக்களப்பு மாநகரம் யுனிசெவ் மற்றும் செரி (CERI) நிறுவனங்களுடன் இணைந்து சிறுவர் நேய மாநகர செயற்திட்டத்தினை முன்னெடுத்து வருகின்றது.

இந் நிலையில் மாணவர்களின் தேக ஆரோக்கியத்தையும், பாதுகாப்பான பயணத்தையும் உறுதிசெய்யும் வகையில் பாடசாலை நேரங்களில் கனரக வாகனங்கள் உள்ளிட்ட ஏனைய வாகனங்களின் நெரிசலினைக் கட்டுப்படுத்துவதன் ஊடாகவும், ஒற்றைவழி பாதை ஒழுங்குகளை மேற்கொள்வதன் மூலமாகவும் மாணவர்களின் சைக்கிள் பாதையானது சைகைப் பலகைகளின் காட்சிப்படுத்தலுடன் அமைக்கப்படவுள்ளது.

உடற்பருமன் அதிகரிப்பினால் அவதியுறும் மாணவர்களின் நலன் கருதி, சிறுவர் நேய மாநகர கட்டமைப்பின் ஊடாக முதற்கட்டமாக மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட பாடசாலைகளில் உடற்பயிற்சி உபகரணங்களுடன் கூடிய பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன எனவும், அதன் தொடர்ச்சியாக மாணவர்களின் சைக்கிள் பாவனையை அதிகரிக்கும் நோக்கில் பாதுகாப்பான போக்குவரத்துஒழுங்குகள்போக்குவரத்து பொலிஸார் மற்றும் வீதிப் போக்குவரத்தோடு தொடர்புடைய திணைக்களங்களின்துணையுடன்மேற்கொள்ளப்படவுள்ளன எனவும் இதன்போது மாநகர முதல்வர் கருத்து தெரிவித்தார்.

அத்துடன் இந்தத் திட்டத்தின் மூலம் எதிர்காலத்தில் மாணவர்களின் தேக ஆரோக்கியம் பேணப்படுவதோடு, மாணவர்கள் சுயமாக பாடசாலைக்குச் சென்று வரக் கூடிய ஒரு பாதுகாப்பான சூழல் உருவாகும் எனத் தான் எதிர்பார்க்கிறார் எனவும் இந் நடைமுறை வெற்றியளிக்கும் பட்சத்தில் மாநகரம் முழுவதுமாக இத்திட்டத்தினை விரிவுபடுத்தவுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதன்படி, எதிர்வரும் ஜூலை மாதம் 4 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் புளியந்தீவு பகுதியில் அமைந்துள்ள பாடசாலைகளுக்குச் சென்று வரக்கூடிய வகையில் சைக்கிள்களுக்கான தனியான வழிப்பாதை ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இக் கலந்துரையாடலில், பொலிஸ் திணைக்களத்தின் போக்குவரத்துப் பிரிவின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான பொறுப்பதிகாரி பி.பி.ஏ.சரத் சந்திர, மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்து பிரிவிற்கான நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.கே.பின்னவல, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர் ஏ.எல்.எம்.சர்ஜீன், கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்திய கலாநிதி ஜீ.ஆர்.ரஜீவன், வைத்திய கலாநிதி கே.அருள்நிதி, யுனிசெவ் நிறுவனத்தின் சிறுவர் நேய செயற்திட்டத்திற்கான கொரியா நாட்டின் தொண்டர் கேயோரேடு, யுனிசெவ் நிறுவனத்தின் நிபுணத்துவ அலுவலர் டில்ருக்சி பிருந்தன், செரி (CERI) நிறுவனத்தின் திட்ட அலுவலர் மைக்கல் நிரோஷன் தேவராஜா, அதன் இணைப்பாளர் றினோஷா பிரசன்னா உள்ளிட்டவர்களுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.




# ‘எழுதப்படாத கவிதைகள்’ மட்டக்களப்பில் வெளியீடு

(க.கிருபாகரன்)

பௌர்ணமி கலை இலக்கியத் தொடரின் 42 ஆவது நிகழ்வாக மகுடம் கலை இலக்கிய வட்டம் நடத்திய மண்டூர் அசோகாவின் ‘எழுதப்படாத கவிதைகள்’ சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழா கடந்த செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு பொதுநூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

எழுத்தாளரும், கோறளை மேற்குப் பிரதேச செயலாளருமான வெ.தவராசா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், கிழக்குப் பல்கலைக்கழக ஓய்வுநிலைப் பேராசிரியர் செ.யோகராசா மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் கற்கைகள் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி றூபி வலன்ரீனா பிரான்சிஸ் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர். நூலின் முதல் பிரதியினை மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் வி.றஞ்சிதமூர்த்தி பெற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்டோருக்கான சிறப்புப் பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நூல் தொடர்பான மதிப்பீட்டுரையை எழுத்தாளர் உமா வரதராஜனும், வெளியீட்டுரையை மகுடம் வி.மைக்கல் கொலினும், ஏற்புரையை நூலாசிரியை மண்டூர் அசோகாவும் நிகழ்த்தினர். இந் நிகழ்வுகளை கவிஞர் ஜி.எழில்வண்ணன் தொகுத்து வழங்கினார்.

# காரைதீவு பத்திரகாளி அம்பாளின் உற்சவமும் தீமிதிப்பு வைபவமும்

(காரைதீவு நிருபர் சகா)

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் மற்றும் தீமிதிப்பு வைபவம் எதிர்வரும் 22ஆம் திகதி புதன்கிழமை கதவு திறத்தலுடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ச்சியாக 10 தினங்கள் சடங்கு இடம்பெற்று, ஜூலை மாதம் முதலாம் திகதி தீமிதிப்பு வைபவம் நடைபெறவுள்ளது.

சம்மாந்துறை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் மற்றும் காரைதீவு பத்திரகாளியம்மன் ஆலயத்தின் பிரதம பூசகர் குணசிங்கம் லோகேஷ் தலைமையில் உற்சவம் இடம்பெற இருக்கின்றது.

தினமும் பகல் பூசை 13.30 மணிக்கும் இரவு பூசை 7 மணிக்கும் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது .24ஆம் திகதி வெள்ளிக்கிழமை மகா விஷ்ணு ஆலயத்தில் இருந்து பாற்குடபவனி இடம்பெற இருக்கின்றது. இருபத்தி எட்டாம் திகதி செவ்வாய்க்கிழமை முத்துச்சரம் புறத்தில் அம்பாள் வீதியுலா வருகிறார்.

முதலாம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு மஞ்சள் குளிக்கும் நிகழ்வு இடம்பெற்று தீமிதிப்பு வைபவம் இடம்பெறும். கூடவே ,அன்று அன்னதான நிகழ்வும் இடம்பெற இருக்கின்றது.

இறுதியாக 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை எட்டாம் நாள் வைரவர் திருச்சடங்கு இடம்பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவிக்கின்றார்கள்.

# கல்முனை நூலகத்தை கவனிப்பார் இல்லையா?

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை மாநகர பிரதம நூலகமாக இருந்துவரும் ஏ.ஆர். மன்சூர் நூலகம் கவனிப்பாரற்று குப்பை மேடாக காட்சி தருகின்றது எனக் குற்றம் சுமத்தப்படுகின்றது. கல்முனை நூலகத்தை திறன்பட இயக்க மாநகர நிர்வாகம் முன்வர வேண்டும் என மக்கள் சார்பில் கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது. முன்னாள் அமைச்சர் கலா நிதி ஏ.ஆர். மன்சூரின் சேவைகளைப் பாராட்டி இந்த வாசிகசாலைக்கு அவரது பெயரே வைக்கப்பட்டது.

அக்காலத்தில் அந்த நூலகத்தில் மிகவும் பெறுமதியான நூல்கள் இருந்தன. இப்போது மூடைகளில் அறிவுநூல்கள் கட்டி வைக்கப்பட்டுள்ளன.

கல்முனை முதல்வர், கல்முனை பிரதி முதல்வர், ஆணையாளர், நிர்வாக உத்தியோகத்தர் போன்றோரின் அலுவலகங்கள் அடங்கலாக கல்முனை மாநகர சபையின் நிர்வாகம் இடம்பெற்றுவரும் வளாகத்தில் அமைந்துள்ள இந்த வாசிகசாலையை கூட ஒழுங்காக நிர்வாகிக்க முடியாத அளவில் கல்முனை மாநகர சபை நிர்வாகம் இயங்குவதாகவும், இது தொடர்பில் கல்முனை மாநகர சபை உறுப்பினர்கள் யாரும் கணக்கில் எடுக்காமல் இருப்பது வேதனையளிப்பதாகவும் வாசகர்கள் வருத்தம் தெரிவிக்கின்றனர்.




காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# மின்சாரசபையின் தலைவர் பதவி விலக ஜனாதிபதியின் அழுத்தமே காரணமாம்!

## நளின் பண்டார தெரிவிப்பு



இலங்கை மின்சாரசபையின் முன்னாள் தலைவர் எம்.எம்.சி.பேர்டினாண்டோ பாரதூர தவறிழைத்துள்ளார். பதவி விலகுவதால் அவரால் இதிலிருந்து தப்பி விட முடியாது.

ஜனாதிபதியின் அழுத்தமே அவர் பதவி விலகக் காரணமாகும். எனவே அவரை எதிர்வரும் 21 ஆம் திகதி கோப் குழுவிற்கு அழைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

அத்தோடு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்நாட்டுக்கு சாபம் எனத் தெரிவித்த அவர் , அவர் பதவி விலகும் வரை அந்த சாபம் நீங்காது என்றும் குறிப்பிட்டார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் 15 ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எவ்வாறு தனக்கு அழுத்தம் பிரயோகித்தார் என்பதை எம்.எம்.சி. பேர்டினாண்டோ மிகத் தெளிவாக கோப் குழுவில் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதிக்கு இந்திய பிரதமர் மோடி அழுத்தம் பிரயோகித்தார் எனவும் அவர் குறிப்பிட்டார். தலைவர் பதிவியை இராஜிநாமா செய்வதன் மூலம் இதிலிருந்து அவரால் தப்பிக்க முடியாது. நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளுக்கமைய நாடாளுமன்ற வரப்பிரசாத சட்டத்தின் அடிப்படையில் பேர்டினாண்டோ பாரதூரமான பொறுப்பிலிருந்து விலகலிலேயே ஈடுபட்டுள்ளார்.

பாரதூரமான தவறிழைத்துள்ளார். எனவே தலைவர் பதவியை இராஜிநாமா செய்தாலும் 21 ஆம் திகதி அவரை கோப் குழுவிற்கு அழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவரால் தெரிவிக்கப்பட்ட கருத்து சாதாரணமானதல்ல. எவருக்குமே இது தவறுதலாக தெரிவிக்கப்பட்ட விடயம் என்று கூற முடியாது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அழுத்தத்துக்கு அமையவே அவர் பதவி விலகியுள்ளார்.

இவரால் தெரிவிக்கப்பட்ட கருத்தினால் இலங்கையில் மாத்திரமன்றி இந்தியாவிலும் தீப்பற்றியுள்ளது. அதானி குழுமத்தின் பிரதானி இந்த விடயம் தொடர்பில் அதிருப்தியடைந்துள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

இது நாட்டின் வலு சக்தியுடன் தொடர்புடைய பிரச்சினை என்பதைப் போலவே , நாட்டின் எதிர்காலம் பற்றிய பிரச்சினையுமாகும்.

அதானி நிறுவனத்துக்கு காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தை வழங்கினால் வருடாந்தம் 7 கோடியே 10 லட்சம் டொலரை செலுத்தி மின்சாரத்தைப் பெற வேண்டியேற்படும். எனவே தான் மின்சார சட்ட திருத்தத்தையும் நாம் எதிர்த்தோம்.

இது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தற்போதைய உண்மை நிலைவரத்தை நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்பதோடு, இந்தப் பிரச்சினைக்கான பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இது விரைவில் தீர்த்துக் கொள்ளக் கூடிய பிரச்சினை அல்ல என்பதும் தெளிவாகிறது.

நாட்டில் தற்போது காணப்படுகின்ற பிரச்சினைகளுக்கு எதிர்வரும் 6 மாதங்களிலும் தீர்வு காண முடியாது. கோட்டாபய ராஜபக்ஷ நாட்டின் சாபமாகும்.

அவர் பதவி விலகும் வரை நாட்டுக்கு ஏற்பட்டுள்ள சாபமும் நீங்காது. ரணில் விக்கிரமசிங்கவால் அந்த சாபத்தை நீக்க முடியாது. மக்கள் கடும் கோபத்திலுள்ளனர். அவர்கள் கோபத்தை வெளிப்படுத்தினால் மே 9 ஆம் திகதி ஏற்பட்டதை விட மோசமான நிலைமை ஏற்படும். 21ஆவது அரசமைப்பு திருத்தம் இவ்வாரமும் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவில்லை. காரணம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவரும் வெவ்வேறு நிகழ்ச்சிநிரலுக்கமையதத்தமது அதிகாரங்களைத்தக்கவைத்துக் கொள்வதற்காகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

மக்களை மேலும் கோபத்துக்கு உள்ளாக்காமல் அவர்கள் விரும்பும் ஆட்சியை அமைப்பதற்கு அரசாங்கம் வாய்ப்பளிக்க வேண்டும். – என்றார்.

# சீன நிதியுதவியில் 8 லட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் சுகாதார அமைச்சுக்கு வழங்கிவைப்பு



கிராமிய மட்டத்தில் நேரடியாக பணியில் ஈடுபட்டுவரும் பொதுச்சுகாதார ஊழியர்களுக்கு போதிய வசதிகளை வழங்குவதற்காக சீன அரசாங்கத்தின் உதவியுடன் பெறப்பட்ட 8 லட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான அத்தியாவசிய மருத்துவ உபகரணங்கள் புதன்கிழமை ஐக்கியநாடுகள் சனத்தொகை நிதியத்தால் சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டன.

அங்கு கருத்து வெளியிட்ட சீனத் தூதுவர் சி சென்ஹொங் –

இலங்கையின் நட்புறவுத் தரப்புக்கள் அனைத்தும் ஒன்றிணைந்து இந்த அழகிய நாட்டுக்கு உதவமுடியும் என்பதுடன், அதன்மூலம் மனிதாபிமான நெருக்கடி ஏற்படுவதை இயலுமானவரை தடுக்க முடியும் என்று சுட்டிக்காட்டியமையுடன், இந்த நெருக்கடியிலிருந்து மீளும் செயன்முறையில் இலங்கை மக்களுடன் சீனா துணைநிற்கும் என்று உறுதியளித்தார்.

சீன அரசாங்கத்தால் வழங்கப்பட்ட 8 லட்சம் அமெரிக்க டொலர் நிதியுதவியின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட அத்தியாவசிய மருத்துவ உபகரணங்கள் அடங்கிய 3 லட்சத்து 28 ஆயிரத்து 600 பொதிகளைக்கொண்ட இந்த அன்பளிப்பு ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி குன்லே அடெயினி, இலங்கைக்கான சீனத்தூதுவர் சி சென்ஹொங் ஆகியோரால் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடம் கையளிக்கப்பட்டு, பின்னர் அமைச்சின் ஊடாக அந்த உபகரணங்கள் குடும்பநல சுகாதாரப் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

கொவிட்–19 போன்ற பொதுச்சுகாதார அவசர நிலைமைகளின்போது மக்களுக்கான சேவை வழங்கலைத் தொடர்ந்து முன்னெடுக்கும் பொதுச் சுகாதார ஊழியர்களுக்குப் போதிய பாதுகாப்பை வழங்குவதே இதன் நோக்கமாகும் என்று தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம், இவ்வாறான அவசர சூழ்நிலைகளில் மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யும்போது பொதுச்சுகாதார ஊழியர்கள் உடலியல் ரீதியில் மாத்திரமன்றி உளவியல் ரீதியிலும் அழுத்தங்களுக்கு உள்ளாகின்றனர் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

'தற்போது நாடு பாரிய சமூக மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில், சுகாதாரப்பணியாளர்களுக்கு அவசியமான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதில் சுகாதார அமைச்சு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருப்பதால் இவற்றுக்கான தேவை மேலும் அதிகரித்துள்ளது.

எனவே இப்போது வழங்கப்பட்டுள்ள 3 லட்சத்து 28 ஆயிரத்து 600 மருத்துவப் பாதுகாப்பு உபகரணங்கள் நாடளாவிய ரீதியில் தாய் – சேய் பராமரிப்புப்பணியில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு அவசியமான மருத்துவ உபகரணங்களுக்கான இடைவெளியை நிரப்புவதுடன், வருங்காலத்தேவைகளின் நிமித்தம் சுகாதார அமைச்சின் இயலுமையை வலுப்படுத்தும் என்றும் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இவ்வாறு சுகாதார அமைச்சின் ஊடாகக் குடும்பநல சுகாதாரப் பணியகத்துக்கு அன்பளிப்புச்செய்யப்பட்டுள்ள மருத்துவ உபகரணங்கள் நாட்டின் 25 மாவட்டங்களிலும் உள்ள தாய் – சேய் உடல்நலப் பராமரிப்பு நிலையங்கள், குடும்பத்திட்ட சிகிச்சை நிலையங்கள், மித்துரு பியச நிலையங்கள், யொவுன் பியச நிலையங்கள், மகளிர் நல்வாழ்வு சிகிச்சை நிலையங்கள் என்பவற்றுக்குப் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

இது இவ்வாறிருக்க மேற்குறிப்பிட்ட உபகரணங்களைக் கையளிப்பதற்காக நேற்று புதன்கிழமை கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய இலங்கைக்கான சீனத்தூதுவர் சி சென்ஹொங் கூறியவை வருமாறு –

கொவிட் – 19 தொற்றுப்பரவலின் தொடக்கத்திலிருந்து சுகாதாரப் பணியாளர்கள் தம்முடைய உயிரையும், தமது குடும்பத்தினரின் உயிரையும் அச்சுறுத்தல் நிலையிலேயே வைத்திருக்கின்றார்கள். தற்போதைய பொருளாதார நெருக்கடியின் விளைவாக மருத்துவ உபகரணங்களுக்கு ஏற்பட்ட பற்றாக்குறையால் அவர்கள் மீதான சுமை மேலும் உயர்வடைந்திருப்பதுடன், அச்சுறுத்தல் நிலையும் அதிகரித்துள்ளது.

எனவே அவசரநிலையின் போது அது வைரஸ் தொற்றுப்பரவலா அல்லது பொருளாதார நெருக்கடியா என்பதைக் கடந்து மிகவும் அச்சுறுத்தலான, பின்தங்கிய நிலையிலுள்ளவர்களுக்கு உதவவேண்டியது அவசியமாகும்.

சீனாவின் 50 கோடி யுவான் நிதியுதவியின்கீழ் முதற்கட்ட மருந்துப் பொருள்கள் கடந்த 3 ஆம் திகதி இலங்கையை வந்தடைந்தன. அதேவேளை முதலாவது கட்டமாக அரிசி ஏற்றப்பட்ட கப்பல் இம்மாத இறுதியில் நாட்டை வந்தடையும்.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கையின் நட்புறவுத்தரப்புக்கள் அனைத்தும் ஒன்றிணைந்து இந்த அழகிய நாட்டுக்கு உதவமுடியும் என்பதுடன், அதன்மூலம் மனிதாபிமான நெருக்கடி ஏற்படுவதை இயலுமான வரை தடுக்கமுடியும் என்று சுட்டிக்காட்டுகின்றேன். அத்தோடு இலங்கை மக்கள் இந்த நெருக்கடியிலிருந்து மீண்டு வருவார்கள் என்று நான் நம்புவதுடன், அது வரலாற்றில் நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்தச் செயன்முறையில் சீன மக்கள் இலங்கையர்களுடன் துணை நிற்பார்கள் என்று அவர் உறுதியளித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.06.2022இல் வெளியிடப்பெற்றது.